**9.2 தணிக்கை உள்ளாட்சி நிதித் தணிக்கை பேரூராட்சிகளின் நிலுவை தணிக்கைத் தடைகளை விரைவாக நிவர்த்தி செய்ய மாநில / மாவட்ட அளவிலான் உயர்மட்ட குழு அமைத்தல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.**

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

அரசாணை(நிலை) எண்.1 நாள் : 4.1.2007

படிக்கப்பட்டது.

1. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் நேர்முகக் கடிதம் ந.க.எண். 1803/CLR/2006 நாள் 15.11.2006.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.17430/2005டி5 நாள் 5.12.2006

**ஆணை**

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் பார்வை ஒன்றில் கண்டுள்ள தனது கடிதத்தில் 14.7.2006ம் நாளிட்ட அரசாணை நிலை எண்.55–ல் சிறப்பு சிற்றூராட்சிகளை மீண்டும் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது என்றும், தற்போது 561 பேரூராட்சிகளிலும் மொத்தமாக 1,04,608 தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளன எனவும், இவைகள் அனைத்தும் உரிய ஆவண சான்றுகளுடன் தணிக்கைத் தடை நீக்க, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அமைத்து பரிசீலித்தால் பேரூராட்சிகளில் ஓய்வு பெற உள்ள அலுவலர்கள் பலர் ஓய்வூதிய பலன்கள் போன்றவைகள் விரைவில் கிடைக்கப்பெற வழிவகை ஏற்படும், இதனால் பேரூராட்சிகளில் தணிக்கைத் தடைகள் நிறைய குறையும் என்றும் குறிப்பிட்டு பேரூராட்சிகளில் உள்ள தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, கீழ்கண்ட உறுப்பினர்களுடன் மாவட்ட அளவில் உயர்மட்ட குழுக்களும், மாநில அளவில் ஒரு உயர்மட்டக் குழுவும் அமைக்குமாறு கோரியுள்ளார். பேரூராட்சிகளின் இயக்குநரும் இதனை பரிந்துரைத்துள்ளார்.

I. மாவட்ட அளவில் உயர்மட்டக் குழு

| | | | |
|---|---|---|---|
| (i) | மாவட்ட ஆட்சித் தலைவர் | – | தலைவர் |
| (ii) | மண்டல துணை இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை) | – | உறுப்பினர் |
| (iii) | கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலைத் துறை) | – | உறுப்பினர் |
| (iv) | செயற் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | – | உறுப்பினர் |
| (v) | மாவட்ட சுகாதார அலுவலர் | – | உறுப்பினர் |
| (vi) | கணக்கு அலுவலர் (பேரூராட்சிகளின் இயக்ககம்) | – | உறுப்பினர் |
| (vii) | மண்டல உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) | – | உறுப்பினர்–செயலர் (கூட்டம் கூட்டுபவர்) |

II. மாநில அளவிலான உயர்மட்டக் குழு

| | | | |
|---|---|---|---|
| (i) | பேரூராட்சிகளின் இயக்குநர் | – | தலைவர் |
| (ii) | உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநர் | – | உப தலைவர் |
| (iii) | செயற் பொறியாளர், பேரூராட்சிகள் இயக்ககம் | – | உறுப்பினர் |
| (iv) | செயற் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | – | உறுப்பினர் |
| (v) | இணை இயக்குநர் (ஊரக சுகாதாரத் துறை) | – | உறுப்பினர் |
| (vi) | மண்டல இயக்குநர் பேரூராட்சிகளின் இயக்ககம் | – | உறுப்பினர் |

2. மேலே பத்தி 1–ல் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர்களின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆராய்ந்து அதனை ஏற்று பேரூராட்சிகளில் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் தணிக்கைத் தடைகளை விரைவில் நிவர்த்தி செய்ய ஏதுவாக மேலே பத்தி 1–ல் குறிப்பிட்டுள்ளவாறு மாவட்ட அளவில் உயர்மட்டக்குழுக்களையும் மற்றும் மாநில அளவில் ஒரு உயர்மட்ட குழுவினையும் அமைத்து இவன் ஆணையிடுகிறது.

3. மேலே குறிப்பிட்டப்பட்டுள்ள மாவட்ட அளவிலான் குழுக்கள், மாதம் ஒருமுறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது தவறாது கூட வேண்டும். இக்குழுவிற்கு பின்கண்ட அதிகாரங்கள் வழங்கப்படுகிறன்றன:–

1) ஒருங்கிணைப்பாளர் குழுவின் கூட்டத்தில் சேர்க்கப்படவுள்ள தணிக்கைத் தடைகள் குறித்த விவரத்தினை சம்பந்தப்பட்ட ஓய்வு பெற்ற / ஓய்வு பெறவுள்ள செயல் அலுவலர்களுக்கு முன்கூட்டியே விவரம் அளித்தல்.

2) இவ்வாறு தணிக்கை தடைகளுக்குட்படுத்தப்பட்ட ஒய்வுப் பெற்ற / ஓய்வு பெற உள்ள பேரூராட்சி செயல் அலுவலர்கள் தங்கள் சம்பந்தப்பட்ட தணிக்கைத் தடைகளுக்கு தாங்கள் கூற விரும்பும் கருத்துருக்களை விசாரணைக் குழுவின் முன் ஆஜராகி கூடுதல் விளக்கங்கள் ஏதேனும் இருப்பின் அளித்தல்:

3) முறைகேடுகள் பற்றிய அறிக்கையினை குழுவின் முன் வைத்து பரிசீலனை செய்தல்.

4) இழப்புகளுக்கான பொறுப்பினை செயல் அலுவலர் 20 சதவீதம், உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் முறையே 40 சதவீதம் மற்றும் 20 சதவீத பொறுப்பும் தலைமை எழுத்தர் 15 சதவீத பொறுப்பும், எழுத்தர் 5 சதவீத பொறுப்பும், தலைமை எழுத்தர் இல்லாத இடங்களில் எழுத்தர் 20 சதவீத பொறுப்பும் என நிர்ணயம் செய்து இழப்பினை ஈடு செய்தல்.

5) நிதியிழப்பு ஏற்பட்டதாக கருதப்படும் ஒவ்வொரு நிகழ்வினையும் ஆராய்ந்து நிதியிழப்பு ஏற்படுத்தாத தகுதியான நிகழ்வுகளில் பணம் திரும்பப் பெறுவதை முழுவதுமாக கைவிடுதல்:

6) ஒவ்வொரு முறைகேடுகளையும் முறைகேடுகளில் உள்ள தன்மையின் அடிப்படையில் பொருட்படுத்தாது விடுதல்.

7) ஏந்த ஒரு தணிக்கை தடைக்காவது அரசு அளவில் பிழை பொறுத்தல் ஆணை பெறப்பட வேண்டும் எனில் குழுவானது அத்தகைய நிகழ்வினை அரசுக்கு பரிந்துரைத்தல்:

8) இக்குழு பரிந்துரைத்துள்ளவைகள் மற்றும் தணிக்கையில் கோரப்பட்டுள்ளவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவருக்கு அறிவுறுத்தல்:

9) பேரூராட்சி செயல் அலுவலர்களால் செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரால் சுட்டிக் காட்டப்பட்ட எல்லா காலத்திற்குட்பட்ட தணிக்கைத் தடைகளை பரிசீலித்தல்.

10) மாவட்ட அளவில் ஏற்கனவே, முடிவு செய்யப்பட்ட இனங்கள் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறையினரால் விசாரணையில் உள்ள நிகழ்வுகளை இக்குழு பரிசீலனைக்கு எடுத்து கொள்ளாமல் விடல்;

11) மாவட்ட அளவில் தீர்க்கப்படாமல் உள்ள தணிக்கைத் தடைகளை பரிசீலித்தல்.

12) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் மாவட்ட உயர்நிலைக்குழு தொடர்பான நெறிமுறைகளை பின்பற்றல்;

**4.** மாநில அளவிலான குழு மாவட்டக் குழுக்களின் பணிகளை கண்காணித்து மேற்பார்வையிடுவதுடன், மாவட்ட அளவில் தீர்க்கப்படாத தணிக்கைத் தடைகள் குறித்து ஆய்வு செய்து அவற்றை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கும்.

**5.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.4675/FS/06 நாள் 19.12.2006 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் அ.சா.எண்.76/Secy,H&FW/06, நாள் 20.12.06 மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் அ.சா.எண்.143/ Secy,Highways/06, நாள் 21.12.06 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே.தீனபந்து**
அரசு செயலாளர்